ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2206/16 - 2020 දෙසැම්බර් මස 16 වැනි බදාදා - 2020.12.16

*2206/16 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 16 ஆந் திகதி புதன்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


# பகுதி I : தொகுதி (I) - பொது

## சனாதிபதியின் பிரகடனங்களும் பிறவும்

### அதிமேதகு சனாதிபதி அவர்களால் செய்யப்படும் கட்டளை

*1979 ஆம் ஆண்டின் 61 ஆம் இலக்க, அத்தியாவசிய பொதுமக்கள் சேவை சட்டம்*

*முத்திரை*

கோட்டாபய ராஜபக்ஷ

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சனாதிபதி, கோட்டாபய ராஜபக்ஷ ஆகிய நான், 1979 ஆம் ஆண்டின் 61 ஆம் இலக்க, அத்தியாவசிய பொதுமக்கள் சேவை சட்டத்தின் 02 ஆம் பிரிவின்மூலம் எனக்கு உரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம், இதன்கீழ் அட்டவணையில் தெளிவாக காட்டப்பட்டுள்ள சேவைகளை வழங்கலில் ஈடுபடும் எந்தவொரு அரச கூட்டுத்தாபனம் அல்லது அரச திணைக்களம் அல்லது உள்ளூராட்சி நிறுவனம் அல்லது கூட்டுறவு சங்கங்கள் அல்லது அவற்றின் கிளைகளால் வழங்கப்படும் சேவைகளின் அத்தியாவசிய தன்மையை கவனத்தில் எடுத்தும், அந்த சேவைகள் மக்களின் வாழ்க்கைக்கு அத்தியாவசியமானது எனவும், அந்த சேவைகளை இடையூறு அல்லது தடை ஏற்படுத்தக்கூடியது என்பதனால் எந்தவொரு அரச கூட்டுத்தாபனம் அல்லது அரச திணைக்களம் அல்லது உள்ளூராட்சி நிறுவனம் அல்லது கூட்டுறவு சங்கங்கள் அல்லது அவற்றின் கிளைகளால் வழங்கப்படும் கீழே அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டுள்ள சேவைகளை மேற்குறிப்பிட்ட பிரிவின் கருமங்களுக்காக அத்தியாவசிய சேவைகளென இந்த ஆணையின்மூலம் பிரகடனம் செய்கின்றேன்.*

*இரண்டாயிரத்து இருபதாம் ஆண்டு திசெம்பர் மாதம் 16 ஆந் திகதியன்று கொழும்பில் கையெழுத்திடப்பட்டது.*

*அதிமேதகு சனாதிபதியின் ஆணைப்படி*

**பி.பீ. ஜயசுந்தர**
சனாதிபதியின் செயலாளர்


1A - G 33344— 30 (2020/12)

*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**அட்டவணை**

1. 1979 ஆம் ஆண்டின் 51 ஆம் இலக்க, துறைமுக அதிகார சபைச் சட்டத்தின் 3 ஆம் உறுப்புரையினால் தாபிக்கப்பட்ட இலங்கை துறைமுக அதிகாரசபையினால் அதற்கமைவாக மேற்கொள்ளப்படவேண்டிய அல்லது தேவைப்படும் எந்தவொரு தன்மையிலான சேவையின் சகல சேவைகள், வேலைகள் மற்றும் தொழில் பங்களிப்பு

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.